தினகாற்று

25.04.2024

## பிரதமரின் வெறுப்பு பிரச்சாரம்

# இந்திய தேர்தல் ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க சிவில் சமூக அமைப்புகள் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் புகார்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாரா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் பேசியும், உண்மைக்கு மாறான கருத்துக்களை பிரச்சார மேடைகளில் கூறியும், அதனால் நாட்டில் பதட்டத்தை ஏற்படுத்தியும், ஒரு சமூகத்தின்மீது வெறுப்புணர்வை தூண்டியும் வருகின்றார். இது நாடுமுழுவதும் பேசும் பொருளாகவும் கண்டனத்துக்குரியதாகவும் மாறிவருகிறது.

பிரதமர் மோடியின் இந்த போக்கை கண்டித்து இந்திய தேர்தல் ஆணையம் உடனடியாக அவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி மதுரையில் உள்ள சிவில் சமூக அமைப்புகளான மக்கள் சிவில் உரிமைக் கழகம், நாட்டைக் காப்போம், மக்கள் கண்காணிப்பகம், தமிழக பொது மேடை உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட அமைப்புகள் 24ஆம் தேதி மதுரை மாவட்ட தேர்தல் அதிகாரியான மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து புகார் மனுவினை அளித்தனர். இது குறித்து நாட்டைக் காப்போம் அமைப்பின் அமைப்பாளர் வழக்கறிஞர் சி.ஜே.ராஜனிடம் கேட்ட போது பிரதமரின் வெறுப்பு பேச்சுக்களும் போக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கும்,

தேர்தல் நடத்தை விதிகளுக்கும் மிகவும் எதிரானது.

அதனால் இதை இந்திய தேர்தல் ஆணையத்திற்கு நினைவூட்டும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையின் நகலையும், தேர்தல் நடத்தை விதிகளின் நகலையும் மதுரை மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் கொடுத்துள்ளோம்.

அவரும் அதை விரைவில் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைப்பதாக உறுதி கூறினார்.

ஓட்டுக்காக பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்களிடத்தில் வெறுப்புணர்வை தூண்டும் வகையில் நாட்டின் பிரதமரே பேசுவது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

அதனால் சிவில் சமூக அமைப்புகள் தங்களது கடும் கண்டனத்தை இந்தியா முழுவதும் தெரிவித்து வருகின்றனர்.

பிரதமர் இப்படி பேசுவதை உடனடியான நிறுத்திக்கொள்ள வேண்டும். மேலும் வரம்புமீறி பேசியுள்ள பிரதமர் மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் இந்திய தேர்தல் ஆணையம் மௌனம் காப்பது மிகுந்த கவலையை தருகிறது. அதனால் சிவில் சமூக அமைப்புகளின் புகாரை பெற்றுக்கொள்ளும் இந்திய தேர்தல் ஆணையமானது உடனடியாக சட்டபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றார். சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளாக வழக்கறிஞர்கள் சி.சே.இராஜன், ஜான் வின்சென்ட், சந்தனம்,

தியாகராஜன், கணேசன், வெங்கட் ராமன் மற்றும் சமூக ஆர்வலர்களான மகபூப் ஜான், ஜெயக்குமார் மற்றும் பலர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து புகாரினை அளித்தனர்.

